

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (2.7.2024) முகாம் அலுவலகத்தில், நடிகர் நெப்போலியன் சந்தித்து, தனது மகன் திருமண நிச்சயதார்த்த விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (2.7.2024) முகாம் அலுவலகத்தில், மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் அவர்களின் மகன் கோ.ப.அன்பழகன் சந்தித்து, தனது மகன் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.

### விக்கிரவாண்டி இடைத்தேர்தல்: வாக்குப் பதிவிற்கு முந்தைய - பிந்தைய

# கருத்துக்கணிப்பு - தேர்தல் விவகாரங்களை ஊடகங்கள் காட்சிப்படுத்த தடை!

## தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிப்பு!

சென்னை, ஜூலை 3-

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியின் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு 10.07.2024 அன்று காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும். மேற்காணும் இடைத்தேர்தல்களின்போது, வாக்குப்பதிவிற்கு முந்தைய / பிந்தைய கருத்துக் கணிப்புகளின் முடிவுகளை வெளியீடுதலுக்கும் பரப்புதலுக்கும் பின்வரும் வரையறைகள் பொருந்தும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது:

அ) 1951ஆம் ஆண்டு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 126Aஆம் பிரிவின்விதித்துறைகளின்படி, (1) யாதொரு நபரும் வாக்குப்பதிவிற்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளை நடத்துவதோ மற்றும் அதனை அச்சு ஊடகம் அல்லது மின்னணு ஊடகம் வாயிலாக வெளியிடுவதோ அல்லது வேறு ஏதேனும் முறையில், அது எதுவாயினும், பரப்பவோ கூடாது என்று இந்திய தேர்தல் ஆணையத்தினால் இதுசம்பந்தமாக அறிவிக்கப்படலாம்.

(2) உட்பிரிவு (1)றின் காரணங்களுக்காக, தேர்தல் ஆணையம், ஒரு பொது ஆணைப்படி, பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு தேதி மற்றும் நேரத்தை அறிவிக்கும், அதாவது:

(a) ஒரு பொதுத் தேர்தலின்போது, வாக்குப்பதிவு முதல் நாளில் வாக்குப்பதிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் தொடக்கம் முதல் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வாக்குப்பதிவு முடிந்தபின் அரை மணிநேரம் வரை தொடரலாம்.

(b) ஓர் இடைத்தேர்தல் அல்லது பல இடைத்தேர்தல்கள் ஒன்றாக நடைபெற்றால், வாக்குப்பதிவு முதல் நாளில் வாக்குப்பதிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் தொடக்கம் முதல் மற்றும் வாக்குப்பதிவின் முதல் நாளிலிருந்து வாக்குப்பதிவு முடிந்தபின் அரை மணிநேரம் வரை தொடரலாம்.

பல இடைத்தேர்தல்கள் வெவ்வேறு நாட்களில் ஒன்றாக நடைபெற்றால், வாக்குப்பதிவு முதல் நாளில் வாக்குப்பதிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் தொடக்கம் முதல், கடைசி வாக்குப்பதிவு முடிந்த அரைமணி நேரம் வரை தொடரலாம்.

3) இப்பிரிவின் விதிமுறைகளை மீறும், யாதொரு நபரும் இரண்டு வருட சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து விதிக்கப்படும்.

ஆ) 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 126A ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மேற்சொன்ன பிரிவின், (2)(b)ஆம் உட்பிரிவின் விதித்துறைகள் தொடர்பாக, இந்திய தேர்தல் ஆணையம், 10.07.2024 (புதன்கிழமை) காலை 7.00 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரை, வாக்குப்பதிவிற்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளை நடத்துவது மற்றும் அதனை அச்சு ஊடகம் அல்லது மின்னணு ஊடகம் வாயிலாக வெளியிடுவது அல்லது வேறு ஏதேனும் முறையில் பரப்புவது (அது எதுவாயினும்) ஆகியவை தடை செய்யப்பட வேண்டிய கால அளவாக இதனால் அறிவிக்கிறது என்று இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இ) 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 126 (1) (b) ஆம் பிரிவின்கீழ், மேற்காணும் இடைத்தேர்தல்கள் தொடர்பாக வாக்குப்பதிவு முடிவடைவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்துடன் முடிவடைகின்ற 48 மணி நேர கால அளவில் ஏதேனும் கருத்துக் கணிப்பு அல்லது பிற வாக்குப்பதிவு ஆய்வு முடிவுகள் உட்பட, எந்தவொரு தேர்தல் விவகாரங்களையும், எந்தவித மின்னணு ஊடகத்தில் காட்சிப்படுத்துவது தடை செய்யப்படும் என்பதை இந்திய தேர்தல் ஆணையம் மேலும் தெளிவுபடுத்தியுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார்.




### விக்கிரவாண்டி இடைத் தேர்தல்: அன்னியூர் சிவாவை ஆதரித்து

# விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் சின்னத்தச்சூர் ஊராட்சியில் அமைச்சர்கள் எஸ்.எஸ்.சிவசங்கர் - மதிவேந்தன் - மாவட்டச் செயலாளர் மதுரா செந்தில் வாக்குச் சேகரித்தனர் !

விக்கிரவாண்டி, ஜூலை 3 -

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் ஜூலை 10.7.2024 தேதியில் நடைபெறும் இடைத் தேர்தலில் கழகத் தலைவர் முதல்வர் தளபதியார் அறிவித்துள்ள கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள விக்கிர வாண்டி மத்திய ஒன்றியம் சின்னத்தச்சூர் ஊராட்சியில் நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

அதுபோது நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நகர செயலாளர் கார்த்திகேயன், ஒன்றிய செயலாளர்கள் ஏ.பி.ஆர்.சண்முகம், தன்ராசு,தங்கவேல், கே.கே.சண்முகம், எலச்சிபாளையம் தங்கவேல், இளங்கோவன், நாச்சிமுத்து, செல்வம், பேரூர் செயலாளர்கள் கார்த்திராஜ், ராமமூர்த்தி, முருகவேல், பேரூராட்சி தலைவர் மணி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மல்லை ஜெகதீஷ் குமார், அயலக அணி அமைப்பாளர் சாதிக் பாஷா, தொண்டர் அணி அமைப்பாளர் கருணாகரன், சின்னதச்சூர் கிளை கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் மற்றும் வாக்குசாவடி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு வாக்குச் சேகரித்தனர்.

### ஏழிசை மன்னர் எம்.கே.தியாகராஜ பாகவதர் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவித்த

# முதல்வருக்கு தமிழ்நாடு விஸ்வகர்ம முன்னேற்றச் சங்கம் நன்றி!

## சங்கக் கூட்டத்தில் தீர்மானம்!

சிதம்பரம், ஜூலை 3 -

சிதம்பரத்தில் நடைபெற்ற தமிழ்நாடு விஸ்வகர்ம முன்னேற்ற சங்க கூட்டத்தில் திரை உலகின் முதல் சூப்பர் ஸ்டார் “ஏழிசை மன்னர்” எம்.கே.தியாகராஜ பாகவதர் பிறந்த நாளான மார்ச் 1ம் தேதியை அரசு விழாவாக கொண்டாடப்படும் என அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்திற்கு சங்க மாநில தலைவர் ஜி.சேகர் தலைமை தாங்கினார்.

எம்.திருஞானம், கு.நடராஜன், தொழிற் சங்க செயலாளர் ஆர்.இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகரச் செயலாளர் பி.முத்துக்குமார் அனைவரையும் வரவேற்றார்.

நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதர் பிறந்த நாளான மார்ச் 1ம் தேதியை தமிழ்நாடு அரசு அரசு விழாவாக கொண்டாடும் என அறிவித்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், செய்தி ஒளி பரப்பு துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதனுக்கும் தமிழ் நாட்டில் வாழுகின்ற 60 லட்சம் விஸ்வகர்ம சமூக மக்களின் சார்பாக இக்கூட்டத்தில் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

நிகழ்ச்சியில் எஸ்.ரமேஷ், எம்.சுரேஷ், ஆர்.கனகசபை, ஆர்.சேகர், ஜி.முருகன், ஆர்.சிவா, ராஜா, கே.பாலாஜி, பி.சிவக்குமார், எம்.தண்டபாணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவில் நகரப் பொருளாளர் எஸ்.ராஜ்குமார் நன்றி கூறினார்.